IN THE II COURT OF SMALL CAUSES AT CHENNAI – 104

MCOP. No.2638/2023 P.W- 1

Deposition of witness for the petitioner solemnly by Tmt. Vanitha in accordance with the provision of Act 1 for 1873 on 19.11.2024.

| | | | |
|---|---|---|---|
| Name | : Ponkumar | Age | : 43 |
| Father's Name | : Dharmalingam | | |
| Address | : No.54, MEL Street, Thakkolam, Vellore - 631 151 | | |

**<u>முதல் விசாரணை-</u>**

**நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். என்னுடைய தரப்பில் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதிலுள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதனை என்னுடைய முதன்மை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.**

| **S.NO.** | **Exhibits** | **Description** |
|---|---|---|
| 1 | Ex.P.01 | Accident Register |
| 2 | Ex.P.02 | Discharge summary dated 06.01.2023 |
| 3 | Ex.P.03 | Discharge summary dated 02.02.2023 |
| 4 | Ex.P.04 | Medical bills |
| 5 | Ex.P.05 | Scan report |
| 6 | Ex.P.06 | FIR dated 30.12.2022 |
| 7 | Ex.P.07 | Charge sheet |
| 8 | Ex.P.08 | Aadhaar card of the petitioner |
| 9 | Ex.P.09 | PAN card of the petitioner |
| 10 | Ex.P.10 | Bank passbook of the petitioner |
| 11 | Ex.P.11 | Insurance policy of the 1st respondent vehicle |
| 12 | Ex.P.12 | Registration certificate of the 1st respondent vehicle |
| 13 | Ex.P.13 | Driving license of the petitioner |

**மனுப்படி உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்பு. இந்த விபத்து பற்றி காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் என்னுடைய அண்ணன் கொடுத்தார். அவர் எப்போது புகார் கொடுத்தார் என்றால் விபத்து நடந்து இரண்டு நாட்கள் கழித்துதான் கொடுத்தார். நான் கடைகளுக்கு பொருட்கள் சப்ளை செய்யும் டெலிவரி ஏஜென்டாக பணிபுரிந்தேன்

என்றால் சரிதான். எனக்கு மாதம் எவ்வளவு வருகிறது என்பதற்கு ஆதாரமாக நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.3 மற்றும் 5 ஆவணங்களில் எனக்கு தலையில் அடிபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தின்போது நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல, நான் அணிந்திருந்தேன். மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆய்வறிக்கையில் முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்று குறிப்பிட்டுள்ள காரணத்தினால்தான் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் என்னுடைய அஜாக்ரதையும் கவனக்குறைவும்தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது என்பதால் ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

குறுக்கு விசாரணை முடிவுற்றது.

X

**சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.**

II Judge
Court of Small Cause
Chennai